பரிசுத்த பவுல் ஆலயம், குவைத்

# அஹமதி தமிழ் திருச்சபை

## கர்த்தருக்குப் பயந்து, அவர் வழிகளில் நடக்கிறவன் எவனோ, அவன் பாக்கியவான்.

சங்கீதம் 128:1

2019
செப்டம்பர் மாத
செய்தி மலர்

இதழ் : 05
மலர் : 16



# சபை ஊழியரின் அன்பு மடல்



கிறிஸ்துவுக்குள் அன்பான திருச்சபை குடும்பத்தாரே எல்லாம் வல்ல இறைவன் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் எல்லோரும் நலமாக இருப்பீர்கள் என்று விசுவாசிக்கிறேன். என்னுடைய ஆவலும், அனுதின ஜெபமும் அதுவே.

கடந்த ஆகஸ்டு மாதம் முழுவதும் நம்மை கண்மனி போல வழிநடத்தின தேவன் வரும் செப்டெம்பர் மாதத்திலும் நம் கூட இருந்து நமது திருச்சபையை சகல ஆசீர்வாதங்களாலும் திருப்தி படுத்தி வழி நடத்துவாராக!

வேதம் கூறுகிறது " கர்த்தருக்கு பயந்து அவர் வழிகளில் நடக்கிறவன் எவனோ அவன் பாக்கியவான்" என்று சங்கீ-128:1

இயேசு சொன்னார்,

"ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல் சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்பட வேண்டாம் ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள்" என்று (மத்-10:28)

பிரியமானவர்களே, கர்த்தருக்கு மாத்திரம் பயந்து மனசாட்சியின்படி நீதி நியாயங்களை செய்து இரத்தம் சிந்தாதபடி கைகளை உதறி தீமைக்கு விலகி நீதி நியாயங்களை நடப்பித்து உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு எல்லாமே நன்மைக்கு ஏதுவாக நடக்கும் தீமைகள் அவர்களை அனுகாது. செய்கிற காரியங்கள் எல்லாம் கைகூடும். திட நம்பிக்கையை கொடுக்கும் பிள்ளைகளுக்கும் அடைக்கலம் கிடைக்கும். மரணக்கண்ணிகளுக்கு தப்பலாம். ஆயுசு நாட்கள் பெருகும். கர்த்தருக்கு பயப்படுதல் மாத்திரமே ஞானமுள்ள வாழ்க்கைக்கு ஆரம்பம். (நீதி-9:10,10:27,14:26,27)

கர்த்தருக்கு பயந்து வாழ்ந்தவர்கள் எப்படியெல்லாம் ஆசீர்வதிக்கப்பட்டார்கள் என்பதை கீழ்வரும் பகுதிகளில் காணலாம்.

## 1. ஓபேத் ஏதோமைப் போல.........

பெலிஸ்தியரால் பிடிக்கப்பட்ட கர்த்தருடைய பெட்டியை பாலை யூதாவிலிருந்து எருசலேமிற்கு கொண்டு வரும்படி தாவீது ஒரு புது இரதத்தை ஏற்பாடு செய்தான். அப்படியாக கிபியாவிலிருக்கிற அபினதாபின் வீட்டிலிருந்து கர்த்தருடைய பெட்டியைக் கொண்டு வரும்போது மாடுகள் மிரண்டு அசைந்த போது அபினதாபின் மகன் ஊசா அந்தப் பெட்டியை துணிகரமாக பிடித்தான் அதனால் கர்த்தருடைய வல்லமை அவன் மீது இறங்கியது. ஊசா அதே இடத்தில் மரித்தான். இதனால் பயந்து போன இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தருடைய பெட்டியை கித்தியனாகிய ஓபேத் ஏதோமின் வீட்டில் வைத்தார்கள். அவன் ஒவ்வொரு நாளும் அந்த பெட்டியை பரிசுத்தத்தோடும், பயத்தோடும் பாதுகாத்து வந்தான். அந்தப் பெட்டி அவன் வீட்டிலிருந்த மூன்று மாதங்கள் வரைக்கும் கர்த்தர் ஓபேத் ஏதோமையும் அவன் வீட்டார் அனைவரையும் ஆசீர்வதித்தார்.

பிரியமானவர்களே, ஆசாரியனாகிய ஊசா ஏன் மரித்தான்? புற ஜாதியான் கித்தியன் ஓபேத் ஏதோம் ஏன் ஆசீர்வதிக்கப்பட்டான்?

ஒரே ஒரு காரணம் தான் ஓபேத் ஏதோம் கர்த்தருக்கு பயந்தான். அதே விதமாக நாமும் கர்த்தருக்கு பயந்து அவருடைய ஊழியங்களை உண்மையும் உத்தமுமாய் நிறைவேற்றுகின்ற பொழுது உள்ளத்தை பார்க்கின்ற நம்முடைய தேவன் ஜாதி, இன, மொழி, மத பேதமின்றி எல்லோரையும் ஆசீர்வதிப்பார். இப்படிப்பட்ட தெய்வீக ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்ள ஆண்டவருக்கு நம்மை ஓபேத் ஏதோமைப் போல அர்ப்பணிப்போமா?

## 1. ஆயக்காரனைப் போல .

இயேசு ஒரு உவமையின் மூலமாக கர்த்தருக்கு எப்படி பயப்பட வேண்டுமென்று சொல்லிக்கொடுத்தார். பரிசேயன் ஒருவனும், ஆயக்காரன் ஒருவனும் தேவாலயத்திற்கு போய் ஜெபம் செய்தார்கள். பரிசேயன் நின்று தேவனே நான் பறிகாரர், அநியாயக்காரர், விபச்சாரக்காரர் ஆகிய மற்ற மனுஷரைப் போலவும் இந்த ஆயக்காரனைப் போலவும் இராததினால் உம்மை ஸ்தோத்ததிரிக்கிறேன். வாரத்தில் இரண்டு தரம் உபவாசிக்கிறேன். என் சம்பாத்தியத்தில் எல்லாம் தசம பாகம் செலுத்தி வருகிறேன் என்று தனக்குள்ளே ஜெபம் பண்ணினான்.

ஆனால் ஆயக்காரனோ தூரத்திலே நின்று தன் கண்களையும் வானத்திற்கு ஏறெடுக்கத் துணியாமல் தன் மார்பிலே அடித்துக்கொண்டு தேவனே பாவியாகிய என்மேல் கிருபையாயிரும் என்று ஜெபித்தான்.

பிரியமானவர்களே, இயேசு சொன்னார் இந்த ஆயக்காரனே நீதிமானாக்கப்பட்டவனாய் தன் வீட்டுக்கு திரும்பிப் போனான் என்று. அவனுடைய அக்கிரமங்களும் பாவங்களும் ஒரே வினாடியில் மன்னிக்கப்பட்டது. காரணம் என்ன கர்த்தர் மேல் அவன் வைத்திருந்த பயபக்தியும் மனத்தாழ்மையும் பாவ அறிக்கையும் அவனை நீதிமானாய் உருமாற்றம் அடையும்படி வழி செய்தது.

நாமும் கூட நம்மை ஒரு பொருட்டென்று எண்ணி மேன்மை பாராட்டாத படிக்கு வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தருக்கே பயப்படுவோம். கர்த்தருக்கு பயப்படுகிற பயம் சுத்தமும் என்றைக்கும் நிலைக்கிறதுமாயிருக்கிறது. (சங்கீ-19:9)

பூமியெல்லாம் கர்த்தருக்கு பயப்படுவதாக உலகத்திலுள்ள குடிகள் எல்லாம் அவருக்கு அஞ்சியிருப்பதாக. காரணம் அவர் சொல்ல ஆகும் அவர் கட்டளையிட நிற்கும் (சங்கீ-33:8,9) பரிசுத்த அலங்காரத்துடனே கர்த்தரை

தொழுதுகொள்ளுங்கள் பூலோகத்தாரே நீங்கள் யாவரும் அவருக்கு முன்பாக நடுங்குங்கள். கர்த்தருக்கு அவருடைய நாமத்துக்குரிய மகிமையை செலுத்தி காணிக்கைகளை கொண்டு வந்து அவருடைய பிரகாரங்களில் பிரவேசியுங்கள். (சங்கீ–96:8,9)

2. யோபுவைப் போல..

கர்த்தர் யோபுவைக் குறித்து சாத்தானிடம் சவாலாக கூறிய வார்த்தை யோபு உத்தமனும் சன்மார்க்கனும் தேவனுக்கு பயந்து பொல்லாப்புக்கு விலகுகிறவனுமாகிய அவனைப் போல பூமியில் ஒருவனும் இல்லை என்று. ஆம் பிரியமானவர்களே யோபு ஒரு உத்தமன். அவன் ஒரு சன்மார்க்கன் எல்லாவற்றுக்கும் மேலாக தேவனுக்கு பயந்து பொல்லாப்புக்கு விலகுகிறவன். அதனால்தான் கடவுள் அவனையும் அவனுக்குண்டான எல்லாவற்றையும் சுற்றிலும் வேலி அடைத்திருந்தார். உன்னதமானவரின் மறைவிலிருக்கிறவன் சர்வ வல்லவருடைய நிழலில் தங்குவான் என்று தாவீது கூறினார் (சங்கீ–91:1)

எவ்வளவோ சோதனைகளை சாத்தான் கொண்டு வந்து அவனுடைய சொத்து, சுதந்திரங்களை எல்லாவற்றையும் அழித்தான். அவனையும் நோய்வுறச் செய்தான். ஆனாலும் எல்லா சூழ்நிலையிலும் கர்த்தருக்கு பயப்படுகிற பயத்தை அவன் விட்டுவிடவில்லை. கர்த்தர் கொடுத்தார் கர்த்தர் எடுத்துக்கொண்டார். கர்த்தர் நாமத்திற்கே ஸ்தோத்திரம் என்றான். இவையெல்லாவற்றிலேயும் யோபு பாவம் செய்யவுமில்லை, தேவனைப் பற்றிக்குறை சொல்லுவுமில்லை. (யோபு–1:21,22)

முடிவு என்ன? யோபு இழந்த எல்லாவற்றையும் இரட்டிப்பாய் பெற்றுக்கொண்டான். அல்லேலூயா.

உமக்கு பயந்தவர்களுக்கும் மனுப்புத்தரருக்கு முன்பாக உம்மை நம்புகிறவர்களுக்கும் நீர் உண்டு பண்ணி வைத்திருக்கிற உம்முடைய நன்மை எவ்வளவு பெரியதாயிருக்கிறது. (சங்கீ–31:19)

கர்த்தருடைய தூதன் அவருக்கு பயந்தவர்களை சூழப் பாளயமிறங்கி அவர்களை விடுவிக்கிறார். கர்த்தருடைய பரிசுத்தவான்களே அவருக்கு பயந்திருங்கள். அவருக்கு பயந்தவர்களுக்கு குறைவில்லை. சிங்கக்குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாயிருக்கும் கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையும் குறைவு படாது. (சங்கீ–34:9,10) கர்த்தரைத் தங்களுக்கு தெய்வமாகக் கொண்ட ஜாதியும், அவர் தமக்கு சுதந்திரமாக தெரிந்து கொண்ட

ஜனமும் பாக்கியமுள்ளது. தமக்கு பயந்து தமது கிருபைக்கு காத்திருக்கிறவர்களின் ஆத்துமாக்களை மரணத்திற்கு விலக்கி விடுவிக்கவும், பஞ்சத்தில் அவர்களை உயிரோடே காக்கவும் கர்த்தருடைய கண் அவர்கள் மேல் நோக்கமாயிருக்கிறது.(சங்கீ-33:12,18,19)

ஆகவே பிரியமானவர்களே, கர்த்தருக்கு பயப்படுதலை மாத்திரம் நாம் தெரிந்துகொள்வோம். வேதாகமத்தில் சொல்லப்படுகிற அனைத்து ஆசீர்வாதங்களையும் நாம் பெற்றுக்கொள்வோம். ஓபேத் ஏதோமைப் போல ஆயக்காரனைப் போல யோபுவைப் போல எல்லா சூழ்நிலையிலும் கர்த்தருக்கு பயப்படுகிற பயத்திலே நிலைத்திருப்போம். சங்கீ-128 முழுவதும் கர்த்தருக்கு பயப்படுகிறதினால் எப்படி ஒரு மனுஷன் ஆசீர்வதிக்கப்படுகிறான் என்பதை பட்டியலிட்டிருக்கிறது. கையின் பிரயாசத்தை சாப்பிடவும், பாக்கியமும் நன்மையையும், பெற்றுக்கொள்ளவும் உயர் குணமுள்ள மனைவி,பிள்ளைகளைப் பெற்று எருசலேமுக்கு ஈடான பாக்கியமுள்ள வாழ்க்கையை பெற்று கொள்வது மாத்திரமல்ல பிள்ளைகளின் பிள்ளைகளையும் கண்டு இஸ்ரவேலின் சமாதானத்தையும் , மகிமையையும் பெற்று அனுபவிப்போம்.

கர்த்தர் தாமே நம் ஒவ்வொருவரையும் ஆசீர்வதித்து கர்த்தருக்கு பயந்த வாழ்க்கையை வாழ்வதற்கு நம்முடைய ஆவி, ஆத்துமா, சரீரத்தை பக்குவப்படுத்துவாராக.

கர்த்தரின் பணியில்,

சபையின் ஊழியர்

**சகோ. ஸ்டாலின்**

## உபாகமம் ஒரு பார்வை

**1. ஏன் எழுதப்பட்டது?**

கடந்த காலங்களில் தேவன் எப்படி தம்முடைய ஜனங்களை நடத்தினார் என்று ஞாபகபடுத்தவும். அவருடைய கட்டளைகளையும் பிரமாணங்களையும் நினைவுடுத்தவும் எழுதப்பட்டது.

**2. எழுதியவர் : மோசே**

**3. எழுதப்பட்ட காலம் : கிமு 1406**

**4. இப்புத்தகத்தின் சம்பவம் நிகழ்ந்த காலம்**

காதேஸ்பர்னேயாவை விட்டு புறப்பட்ட ஒரு சில நாட்களில் இஸ்ரவேலரின் இரண்டாம் தலைமுறையினர் யோர்தான் நதியின் கிழக்கு கரையில் மோவாப் சமவெளியில் கிமு 1407ல் பாளயமிறங்கியிருந்த நேரம் காலம் சுமார் 1 மாதம்

# 2019 ஆகஸ்டு மாத வேத வினாவுக்கு பதில்

1. தாவீது – 2 சாமுவேல் –24:10
2. தாவீது – 2 சாமுவேல் –5:4
3. யோவாப் – 2 சாமுவேல் –12:26–28
4. ஊசா – 2 சாமுவேல் –6:6,7
5. இஸ்பிபெனோப் – 2 சாமுவேல் –21:16
6. சம்மா – 2 சாமுவேல் –23:11,12
7. சிமேயி – 2 சாமுவேல் –19:18,20
8. பெனாயா – 2 சாமுவேல் –23:20
9. தாவீது – 2 சாமுவேல் –7:22
10. ஓபேத் ஏதோமின் வீட்டார் – 2 சாமுவேல் –6:1– 14
11. யோசேப்பாசெபெத் – 2 சாமுவேல் –23:8
12. கர்த்தருடைய பெட்டி – 2 சாமுவேல் –6:3–11
13. தாவீது – 2 சாமுவேல் –5:10
14. 3 வருஷங்கள்– 2 சாமுவேல் –21:1
15. பெனாயா – 2 சாமுவேல் –23:20

## எண்ணாகமம் ஒரு பார்வை

1.இப்புத்தகம் சம்பங்கள் நிகழ்ந்த காலம்.
கிமு 1444–கிமு 1407
காதேஸ்பானேயாவில் 38 ஆண்டுகள, சில மாதங்கள்

2. எழுதியவர் – மோசே

3. எழுதப்பட்ட காலம்
கிமு 1450–கிமு 1410

4.முக்கிய குறிப்பு , புள்ளி விவரங்கள்

அதிகாரங்கள் 36
வசனங்கள் 1228
பெரிய அதிகாரம் 7
வசனங்கள் 89
சிறிய அதிகாரம் 17
வசனங்கள் 13

## 2019 ஆகஸ்டு மாத வேத வினாவுக்கு பதில் எழுதியவர்கள்

Sis. சுகந்தி தம்பு குமார்
Sis. பத்மினி வர்கீஸ்
Sis. ஜீவி பாக்கியவதி வேதானந்தம்
Sis. செலின் டேவிட் ஜெயகுமார்
Sis. பிரிசில்லா செங்குட்டுவன்
Sis. ஹெலன் ஷீஜா ராபின்
Sis. ஷீபா பிரசாத் சுந்தரம்
Sis. லதா கிறிஸ்டோபர்

## முக்கிய கதா பாத்திரங்கள்

மோசே, ஆரோன், மிரியாம்,யோசுவா, காலேப், எலெயாசர், பினகாஸ், கோரா, தாத்தான், அபிராம், பிலேயாம், பாலாக்.

**முக்கிய இடங்கள்**
சீனாய் வனாந்தரம், காதேஸ்பர்னோயா மோவாப் சமவெளி,
ஓர் மலை(ஆரோன் மரித்த இடம்)
பிஸ்கா, (மோசே மரித்த இடம்)

**பகுப்பாய்வு**
அதிகாரங்கள் 1–10, 11–21, 22–36

முக்கிய அதிகாரம் 6,14
முக்கிய வசனங்கள் 14:22,23–20:12

**முக்கிய வார்த்தை**
பாளயம், பாளையம்யிறங்கினார்கள்
123 முறை வருகிறது

## ஜுலை மாதம் விடை எழுதி விடுபட்ட பெயர்

சகோதரி. ஷீபா பிரசாத் சுந்தரம்

## பாவத்தை விட்டு மனந்திரும்பியவன் (அப் 2:30, 17:30)

மனந்திரும்புதல் எல்லாருக்கும் உரியது, ஏனென்றால் எல்லாரும் பாவிகள்தான், நான் துர்குணத்தில் உருவானேன், என்தாய் என்னை பாவத்தில் கர்ப்பந்தரித்தாள் என்று தாவீது ராஜா கூறுகிறார். (சங் 51:5) எல்லோரும் பாவிகள் என்று வேதம் கூறுகிறது. ( ரோமர் 3:10, 12,23) எனவே எல்லோரும் மனந்திரும்ப வேண்டும், மனந்திரும்பியவனே கிறஸ்தவன்.

## நான் கிறிஸ்தவ பெற்றோருக்கு பிறந்தவன் நான் பாவியா?

பிறப்பிலே கிறிஸ்தவன் ஒருவனுமே இல்லை. கிறிஸ்துவில் பிறந்தவனே கிறிஸ்தவன். எங்கள் அப்பா கிறிஸ்தவர் அதனால் நான் இயேசுவுக்கு பேரபிள்ளை என்று கூற முடியாது, எஞ்ஜினியருக்கு பிறந்ததால் நீங்கள் எஞ்ஜினியரல்ல, டாக்டருக்கு பிறந்ததால் நீங்கள டாக்டரல்ல. எங்கப்பா டாக்டர் அதனால் நான் அறுவை சிகீச்சை செய்ய போகிறேன் என்று சொல்லி அருவாளுடன் புறப்பட்டால் ஊரே அலறி ஓடிவிடும். யோவான் ஸ்நானகன், இயேசு, பின்பு பேதுரு யாவருமே மனந்திரும்புங்கள் என்று பிரசிங்கித்தது பக்தியுள்ள யூதர்களுக்குதான் மறந்துவிடாதீர்கள். அவர்களும் மனந்திரும்ப வேண்டியிருந்தது, கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்தாலும் நாம் பாவிகளாகத்தான் பிறக்கிறோம், எனவே மனந்திரும்பவேண்டியது மிக அவசியம்,

## கிறிஸ்தவ பெயருள்ள யாவரும் கிறிஸ்தவரா?

அப்படி இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்! ஆனால் அப்படி இல்லையே, எங்க தெருவிலே இரண்டு நாய்கள் இருந்தது இரண்டுக்கும் கிறிஸ்தவ பெயர்கள்தான், ஒன்று டாமி, அதாவது தோமா! ( இந்தியாவுக்கு வந்த அப்போஸ்தலர் நிலையை பார்த்தீர்களா? அடுத்து ஜிம்மி அதாவது ஜேம்ஸ் அல்லது யாக்கோபு, இவைகள் கிறிஸ்தவ பெயருள்ளதானவை ஆதலால் இவைகள் கிறிஸ்தவர்களா? நாம் கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்தது ஒரு பெரிய சிலாக்கியம்தான், ஆனால் அது போதாதே கிறிஸ்துவுக்குள் பிறக்க வேண்டுமே. ஒரு முறை ஒரு போதகர் வெளிநாடு சென்றிருந்தாராம் அங்கு ஒரு வெள்ளைகார அம்மா உங்களை நான் மறக்காமல் இருக்க என்வீட்டில் ஒருவருக்கு அந்த பெயரை வைத்து இருக்கிறேன் என்று சொன்னார்களாம். போதகரும் அந்த நபரை பார்க்க ஆவலுடன் இருந்தாராம். வீட்டிற்கு பின்னே கொண்டு சென்றார்களாம் அந்த நபரை காட்டினார்களாம். என்ன பரிதாம் அது ஒரு மாடு. அதனால் ஒரு பிரசங்கி மாடாக முடியுமா? அநேக இடங்களில் கள்ளுக்கடை, சாராயகடை, பிராந்திகடை, வைத்திருக்கின்றவர்கள் பெயர்களை வாசிக்கின்றோம், ஆபிரகாம், டேவிட்,

ஜோசப், பழைய ஏற்பாட்டின் பரிசுத்தவான்களெல்லாம் இந்த தொழில் ஆரம்பித்துவிட்டார்களே! ஒரு தடவை ஜெயில் கைதி ஒருவர் தப்பித்துவிட்டான் என்று செய்திதாளில் வாசித்தேன் அவர் பெயர் ஏசுதாஸ் என்ன கொடுமை சார் இது! பிட்பாக்கெட் அடித்தவன் பெயர் பவுல்ராஜ் இப்படி சொல்லிக் கொண்டே போகலாம் சமீபத்தில் செய்திதாளில் வாசித்தேன் தீவிரவாதிக்கு ஆதரவு தந்த ஒருவரில் ஒரு கிறிஸ்தவரின் பெயர் உள்ளம் பதைபதக்கிறது அல்லவா? ஆண்டவருடய நாமம் எவ்வளவாய் தூஷிக்கபடுகிறது பார்த்தீர்களா! பெயர் ஒரு போதும் ஒருவனை கிறிஸ்தவனாக்காது.

## நான் ஆலயத்திற்கு ஒழுங்காக போகிறேனே?

மிக நல்லது ஆனால் ஆலயத்திற்கு ஒழுங்காக போனாலும், உங்கள் பாவங்களை விட்டு விலகவில்லையே! பரிசுத்த ஸ்தலத்திற்கு போக்கு வரவு செய்த துன்மார்க்கர் என்று வேதம் சொல்லுகிறது.பிர 8:10 ஆலயத்திற்கு போகின்ற காரியத்தை தவிற உங்களுக்கும் மற்ற மக்களுக்கும் வித்தியாசம் இருக்கின்றதா? உங்கள பாவங்கள் மன்னிக்கபட்டுள்ளது என்ற நம்பிக்கை இருக்கின்றதா? இன்று மரித்தாலும் பரலோகம் போவேன் என்ற நிச்சயம் உங்ளுக்கு இருக்கின்றதா? உங்களுக்குள் இயேசு வாழ்கின்றாரா?

## நான் ஒரு சன்மார்கன், அது போதாதா?

சன்மார்க்க வாழ்க்கை நல்லது. ஆனால் கர்த்தர் சன்மார்க்கனையும், துன்மார்க்கனையும், நியாயந்தீர்ப்பார் என்று வேதம் கூறுகிறது, பிர 3:17 கிறிஸ்து இல்லாத சன்மார்க்க வாழ்க்கையை கடவுளை நம்பாத நாஸ்திகன் கூட வாழ்ந்து காட்ட முடியும், விக்கிரக வணக்கத்தில் உள்ள எத்தனையே பேர் நல்ல சன்மார்க்க வாழ்க்கை வாழ்கின்றனர். நமது பாவங்களை போக்க சன்மார்க்க வாழ்க்கை உதவாது. சன்மார்க்க வாழ்க்கை போதுமென்றிருந்தால் இயேசு இந்த உலகத்திற்கு வந்த தமது இரத்தத்தை சிந்த வேண்டிய அவசியமே இருந்திருக்காது. எல்லாரும் நல்ல சன்மார்க்க வாழ்க்கை வாழுங்கள் என்று சொல்லி இருப்பார். துன்மார்க்கர்களும் பாவிகளே! சன்மார்க்கர்களும் பாவிகளே?

## ஆவிக்கறிய சபைக்கு போகிறேன்!

தேவ புத்திரர் கர்த்தருடைய சந்நிதியில் கூடின போது சாத்தானும் அவர்கள் நடுவே வந்து நின்றான், என்று யோபின் புத்தகத்தில் காண்கிறோம். ( யோபு 1:6,2:1) சாத்தான் ஓரத்திலே ஒரு மூலையிலே நிற்கவில்லை! நடுவிலே வந்து நின்றான். பிந்தி வந்தால்தான் ஓரத்திலே நிற்க வேண்டும். விசுவாசிகள் பிந்தி வந்தாலும் சாத்தான் நேரத்துடன் கூட்டத்திற்கு வந்து விடுவான் அதனாலே அவனுக்கு நடுவிலே இடம் கிடைக்கிறது. சாத்தான் பரிசுத்தவானா? எந்த ஆவிக்குறிய சபைக்கு போனாலும் மனந்திரும்புதல் உங்களுக்கு தேவை!

## நான் போதகரின் பிள்ளை! போதாதா?

போதகரே மனந்திரும்பாவிட்டால் பரலோகம் போக முடியாது. அப்படி இருக்கும் போது போதகர் பிள்ளையாக இருப்பதால் எந்த சலுகையும் பரலோகத்தில் கிடையாது. நானும் ஒரு போதகன்தான் எனக்கும் பிள்ளைகள் உண்டு அவர்களும் மனந்திரும்பினால்தான் பரலோகம் போக முடியும். ( என் பிள்ளைகள் மனந்திரும்பி இயேசுவின் பிள்ளைகளாக இருக்கிறார்கள். கர்த்தருக்கே மகிமை!) நிக்கொதேமு என்ற யூத போதகர் இயேசுவிடம் வந்த போது இயேசு அவருக்கு மனம் திரும்பாமல் பரலோகம் போக முடியது என்று உறுதியாய் சொன்னது உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா?(யோ 3:1-10)

### மனந்திரும்புதல்

மனம் என்றால் என்னவென்று உங்களுக்கு தெரியும், திரும்புதல் என்றாலும் உங்களுக்கு தெரியும், செய்த பாவத்தை திரும்ப திரும்ப செய்துவிட்டு வாரந்தோறும் அறிக்கை பண்ணினாலும், மறுபடியும் அதையே செய்வது மனம் திரும்புதல் அல்ல.

உங்கள் பாவ வாழ்க்கையை விட்டு திரும்பி இயேசுவை நோக்கி நடந்தால் மனந்திரும்புதல். நீங்கள் உங்களை பாவி என்று ஒப்பு கொள்ளுங்கள். உங்கள் பாவங்களுக்காக உண்மையாக வருத்தப்படுங்கள். இயேசுவே! நீரே மெய்யான தேவன், என் உள்ளத்தில் வாரும், என் பாவங்களை உமது திரு இரத்தத்தால் கழுவும் என்று கேளுங்கள். பழை பாவங்களை பண்ணமாட்டேன் என்று தீர்மானம் பண்ணி அதிலே உறுதியாய் இருங்கள். இயேசுவும் உங்களுக்கு உதவி செய்வார். பழைய போக்கு சரியில்லை என்று உணர்ந்து பாவ வாழ்க்கையை விட்டு இப்போது பரிசுத்த வாழ்விற்கு திரும்பி விட்டீர்கள். இதுதான் மனந்திரும்புதல். இதுதான் மறுபடியும் பிறத்தல். இதுதான் இரட்சிப்பு, ஒரு பாவி தேவனுடைய பிள்ளையாவதற்கு ஒரு நிமிடங்கள் போதும். இப்படி நீங்கள் மனந்திரும்பிய உடன் உங்கள் பெயர் பரலோகத்திலுள்ள ஜீவ புத்தகத்தில் எழுதப்படும். நீங்கள் பரலோகத்திற் குறியவர்கள் என்று அங்கே பதிவாகிவிடும். நீங்கள் தேவனுடைய பிள்ளையாகிவிட்டீர்கள் என்று பரிசுத்த ஆவியானவர் உங்கள் ஆவியுடனே(உள்ளத்திலே) சாட்சி கொடுப்பார்( ரோமர் 8:16)

## திருமுழுக்குப் பெற்று கொள்ளுங்கள் : (அப் 2:38, மாற்கு 16:16)

மனந்திரும்பின பின் செய்ய வேண்டிய காரியம் திருமுழுக்கு பெறுதல் பேதுரு சொன்னது " நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞாஸ்தானம் பெற்றுகொள்ளுங்கள்" அப் 2:38)

ஞானஸ்தானத்திற்கு முன் வரவேண்டியது மனந்திரும்புதல். மனந்திரும்பினவர்களுக்கு ஞானஸ்தானம் கொடுப்பதே வேத ஒழுங்கு. திரு முழக்கை குறித்து " நீங்கள் எந்த ஞானஸ்தானம் பெற்றீர்கள்?" இதை குறித்து அடுத்த இதழில் பார்ப்போம்!

" உன் சந்ததியின்மேல் என் ஆவியையும், உன் சந்தானத்தின்மேல் என் ஆசீர்வாதத்தையும் ஊற்றுவேன்.
(ஏசாயா – 44:3)

## இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

செல்வி. மோனிகா ஷெர்லின்
செல்வி. லிடியா ஆரோக்கியதாஸ்
செல்வி. சாராள் சத்தியநாதன்
செல்வி. ஜெனோலின் ஜெரின்
செல்வி. அறிவழகி கலிய மூர்த்தி
செல்வி. பெர்டினா சுனில்
செல்வி. ரின்ஸி வேளாங்கன்னி

செல்வன். கிதியோன் செங்குட்டுவன்
செல்வன். ஆன்டனி கமலதாசன்
செல்வன். அமீஸ் டேவிட்
செல்வன். ஞானசிகாமணி ஆசீர்வாதம்
செல்வன். சந்தோஷ் ஜெயகுமார்
செல்வன். மிருதுன்ராஜ் சதீஷ்குமார்
செல்வன். விக்டர் செங்குட்டுவன்
செல்வன். ஜாண் ஜோஸ்வா மில்லர்
செல்வன். ஆரோன் டேனியல்
செல்வன். கெவின் அஸ்ரேய் ஆரோக்கியராஜ்

சகோதரி. பிரேமா ராஜேந்திரன்
சகோதரி. சவரியம்மாள் சத்தியநாதன்
சகோதரி. ஜரின் நிஷா கிரன்குமார்
சகோதரி. செலின் சோபினா மேரி டேவிட்
சகோதரி. ஷீலா இன்பராணி பக்தராஜ்
சகோதரி. சுபா ஸ்டீபன்
சகோதரி. அமுதா சுகுமாரன்
சகோதரி. மரியா ஜாண்போஸ்கோ
சகோதரி. பெர்னத் அல்ஜியா மேரி தாமஸ்
சகோதரி. ரீனா வேளாங்கன்னி
சகோதரி. அனிதா ஜஸ்டஸ் விஜயகுமார்
சகோதரி. பிளஸ்ஸி பியூலா

சகோ. ஷர்மன்ராஜ்
சகோ. மணிராஜ்
சகோ. தினேஷ் குமார்

# இனிய பிறந்தநாள் மற்றும் திருமணநாள் நல் வாழ்த்துக்கள்

## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

திருமதி & திரு. அருள்மணி
திருமதி & திரு. ஜோசப் பாபுராஜ்
திருமதி & திரு. வில்சன் செல்லையன்
திருமதி & திரு. பாலகிருஷ்ணன்
திருமதி & திரு. ராஜா ரவிச்சந்திரன்
திருமதி & திரு. ரவிஜாண் பீட்டர்
திருமதி & திரு. அற்புதராஜ்
திருமதி & திரு. மார்க் ஆன்டனி
திருமதி & திரு. ஃபிராங்கிளின்

# 2019 செப்டம்பர் மாத நிகழ்ச்சி நிரல்

## ஞாயிறு ஆராதனை நேரம் மாலை 5:00 முதல் 6:15

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 01/09/2019 | சகோ. சுகுமார் | சகோ.கிறிஸ்டோபர் தேவராஜ் |
| 08/09/2019 | சகோ.ஃப்ராங்ளின் | சகோ. ஆரோக்கியதாஸ் |
| 15/09/2019 | சகோ. M. கிறிஸ்டோபர் | சகோ. பிரசாத் சுந்தரம் |
| 22/09/2019 | சகோ. ஆரோக்கியராஜ் | சகோ. பால் ஜெகநாதன் |
| 29/09/2019 | சகோ. ஜினோ | சகோ. அசோக் குமார் |

## வெள்ளி ஆராதனை நேரம் மாலை 4:00 முதல் 5:45

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 06/09/2019 | Paster. Esaiah ( voice of Jesus Church. Musqet) | |
| 13/09/2019 | சகோ. ஜெயபிரகாஷ் | சகோ. ஸ்டீபஃன் |
| 20/09/2019 | உபவாச திருவிருந்து ஆராதனை | |
| 27/09/2019 | சகோ. வேலுராமர் | சகோ. சாமுவேல் தாசையா |

### முழு இரவு ஜெபம்

12/09/2019 (இடம் பரிசுத்த பவுல் ஆலயம் அஹமதி)
(நேரம் இரவு 10:00 மணி முதல் அதிகாலை 2:00 மணி வரை)

### சகோதரிகள் ஐக்கிய கூடுகை

14/09/2019 (இடம் –ஜெப வீடு ஃபாஹீல் )
(நேரம் மாலை 6:30 மணி முதல் அதிகாலை 8:30 மணி வரை
(வேத வினா பகுதி வேதாகமத்தில் இருந்து பொதுவாக கேள்விகள் கேட்கப்படும் )

### 27/09/2019 வாலிப ஐக்கிய கூடுகை

நேரம் 6:30 வழு 8:30 (இடம் : ஜெப வீடு ஃபாஹீல் )
(வேத வினா பகுதி யோவான் புத்தகத்தில் இருந்து கேள்விகள் கேட்கப்படும் )
நிகழ்ச்சி Sponser சகோ. ஜெரின் அவர்கள் குடும்பம்

**மிஷனெரிச் செய்தி**

## ஆர்தர் மர்காஷியஸ் ஐயர் (1852 – 1906)

மர்காஷியஸ் ஐயர் அவர்கள் இங்கிலாந்திலுள்ள லெமிங்டன் நகரில் 1852–ல் பிறந்தார். இந்தியாவிற்கு ஊழியம் செய்ய வந்து இடையன் குடியில் மிஷனெரி கால்டுவெல்லோடு தங்கி ஊழியப் பயிற்சியைப் பெற்று தமிழ் மொழியைக் கற்றுக்கொண்டார். 1876–ம் ஆண்டு நாசரேத் பகுதி ஊழியப்பொறுப்பை ஏற்றார். தான் ஆஸ்துமா நோயால் அவதியுற்ற போதிலும் தான் விரும்பி ஏற்றுக்கொண்ட ஊழியத்தை நிறைவேற்றுவதில் ஊக்கம் நிறைந்தவர் மர்காஷியஸ்.

1875–ம் ஆண்டு இராபர்ட் கால்டுவெல் பேராயர் இங்கிலாந்துக்கு விடுமுறைக்கு சென்றிருந்தபோது இந்தியாவின் தேவைகளைக் குறித்து அறைகூவல் விடுத்தார். அப்போது தேவனுடைய அழைப்பிற்கு கீழ்ப்படிந்து இந்தியாவில் ஊழியம் செய்ய தன்னை ஒப்புக்கொடுத்தவர்தான் 22 வயதான வாலிபனான ஆர்தர் மர்காஷியஸ்.

மர்காஷியஸ் ஐயர் நாசரேத்தில் பணியாற்றி வந்தபோது பெருமழை பஞ்சம் மற்றும் கலாராவினால் மக்கள் மடிந்தார்கள். அநேகர் அநாதைகளாயினர் அவர்களுக்கென்று 1877–ல் விடுதி ஒன்றை ஆரம்பித்தார். அந்த இல்லம் அநாதை சாலை என்று அழைக்கப்பட்டது. பின்னர் அது தொழிற்கூடமாக மாறியது. இன்று Art and Industrial school vன்ற சிறந்த I.T.I ஆகச் செயல்படுகிறது. பல ஜாதி மாணவர்கள் இங்கு தங்கி கல்வி கற்று இயேசுவின் அன்பையும் கற்றனர். 1878–ம் ஆண்டு நாசரேத் பெண்கள் போர்டிங் பள்ளியில் படித்த பெண்களுக்கு ஆசிரியைப் பயிற்சிப் பள்ளியை ஆரம்பித்தார்.

1892–ம் ஆண்டு புதிய நிலம் வாங்கி பரிசுத்த லூக்கா என்ற மருத்துவ மனையையும் கட்டினார். உடன்குடி, காயாமொழி, காயல் பட்டணம் ஆகிய ஊர்களிலிருந்து வரும் நோயாளிகள் மருத்துவ மனையில் பணியாற்றிய டாக்டர்கள், நர்சுகள் ஆகியோரின் சேவையினால் கிறிஸ்துவின் அன்பை கண்டுகொண்டார்கள். அனைத்து இன மக்களும் கிறிஸ்துவை அறிந்துகொள்ள வேண்டுமென்ற நோக்கத்தோடு உயர்ஜாதி என்றுகருதப்படும் மக்கள் மத்தியிலும் ஊழியம் செய்ய ஆரம்பித்தார் மாகாஷியஸ்.

1903–ம் ஆண்டு நாசரேத் சிறுவர் மிஷன் அமைப்பும் 1904–ல் பெண்கள் சங்கப் பண்டிகையையும் ஆரம்பித்தார். ஆயுள் காப்பீட்டுத் திட்ட முறைகளை அறியாத அக்காலத்திலேயே 1887–ம் ஆண்டு எதிர்கால சகாய நிதி என்ற நிதி அமைப்பை மர்காஷியஸ் ஐயர் தொடங்கி வைத்தார். 1909–ம் ஆண்டு உபதேசிமாருக்காக

மர்காஷியஸ் ஒரு வேதாகமப் பள்ளியை ஆரம்பித்தார். பிறகு அது 1930–ல் இறையியல் கல்லூரியாக உயர்த்தப்பட்டு, 1971–ல் மதுரை அரசரடிக்கு மாற்றப்பட்டது.

1876–ல் ஊழியத்தை ஆரம்பித்த மர்காஷியஸ் இரண்டு வருடங்களுக்குள்ளாகவே 14 சபைகளை உருவாக்கினார். தமது பணிக்காலத்திற்குள் சுமார் 25 க்கும் அதிகமான புதுச்சபைகளை உருவாக்கினார். நாசரேத் தபால் அலுவலகத்திற்கு தந்தி வசதியைப் பெற்றுக்கொடுத்தவர் மர்காஷியஸ். அதுமட்டுமல்ல ரோடு வசதி மற்றும் ரயில்பாதை வசதியும் இவரின் பெருமுயற்சியால் கிடைத்தது.

தனக்கு ஆஸ்துமா வியாதியினால் அடிக்கடி துன்பம் வந்த போதும் தம் பணியை உண்மையுடன் செய்து வந்தார். 1905–ம் ஆண்டு மறுபடியும் பெலவீனப்பட்டு ஆஸ்திரேலியாவிற்கு சென்று பிறகு திரும்பி வந்தார். 1908–ம் ஆண்டு மர்காஷியஸ் ஐயருக்கு ஆஸ்துமாவும், வாதநோயும் வந்து மிகவும் பெலவீனப்பட்டார். ஏப்ரல் 27–ம் தேதி தேவனுடைய கரங்களில் தம்முடைய ஆவியை ஒப்புவித்தார். அவருடைய சரீரம் நாசரேத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு மறுநாள் நல்லடக்கம் செய்யப்பட்டது.

கர்த்தரின் பணியில்,

S.சுகுமார்

## யாத்திராகமம் ஒரு பார்வை

**1. அதிகாம் 1 முதல் 18 வரை பிரயாண விவரங்கள்**

தேவன் தன்னுடைய மக்களை மீட்டுகொள்கிறார்.
அடிமை தளத்தில் வாழ்தல், ஆயத்தம், மிட்பு,(எகிப்தில் 430 வருடங்கள்)
செங்கடலை கடந்த பின்னர் பாலைவனபிரயாணம், தேவனுடைய
வழிநடத்துதல், போஷித்தல், (பாலைவன பிரயாணத்தில் 2 மாதங்கள்)

**2. அதிகாரம் 19 முததல் 40 வரை பிரமாணங்கள் அருளப்படுதல்**

தேவன் தன்னுடைய மக்களுக்கு பிரமாணங்களை வெளிபடுத்துகிறார்.
(சீனாய் மலையருகே 13 மாதங்கள் தங்குதல்) சமூக வாழ்க்கைகான
பிரமாணங்கள், தீர்ப்புகள், ஆராதணை முறை , ஆன்மீக் வாழ்க்கைக்கான
போதனைகள், ஆசாரிப்பு கூடாரத்தின் அமைப்பு.

முக்கிய அதிகாரங்கள்: 12,20,24,33

முக்கிய வசனங்கள் : 6:6– 19:5,6

முக்கிய வார்த்தை : மீட்பு (10) புறப்படபண்ணி (13) கர்த்தர் கற்பித்தபடியே, கட்டளையிட்டபடியே,கற்பித்தபடியெல்லாம்(40)

இந்த வார்த்தைகளுக்கு அடுத்துள்ள எண் எத்தனை தடவை அந்த வார்த்தை வருகிறது என்பதை காண்பிக்கிறது

# 2019 செப்டம்பர் மாதத்திற்கான வேத வினா!

1. "மனுஷ கை விரல்கள் தோன்றி சுவரில் எழுதிற்று" எழுதின அந்த கையுருப்பை கண்ட ராஜா யார்?

2. தன் படுக்கையின் மேல் தரிசனங்களை கண்டவன் யார்?

3. தன் மனைவிமாரோடு விருந்தாளிகள் மத்தியில் குடித்து வெறித்த ராஜா யார் ?

4. பத்து நாட்கள் சோதிக்கபட்டவர்கள் யார்?

5. ஒரு தீர்க்கதரிசிக்கு முன் முகங்குப்பபுற விழுந்து வணங்கின ராஜா யார் ?

6. ஆற்றின் தண்ணீர் மேல் நிற்கிற புருஷனை கண்டது யார்?

7. நேபுகாத்நேச்சார் தானியலுக்கு இட்ட மறு பெயர் என்ன?

8. கழுகின் செட்டையுடைய சிங்கத்தை கண்டது யார்?

9. "இதெக்கேல்" ஆற்றங்கறையில் வைத்து தேவ தரிசனம் கண்டவன் யார் ?

10. " நான் பரலோகத்தில் ராஜாவை புகழ்ந்து உயர்த்தி மகிமைபடுத்துகிறேன்" என்றது யார்?

11. மூவர் நால்வர் ஆனதெங்கே ?

12. தினமும் மூன்று வேளையும் ஜெபம்பண்ணின் புருஷன் யார்?

13. ஒரு பந்தியிலே பொய் பேசுவார்கள் இந்த மாய்மாலகாரர்களை பற்றி வாசிப்பதெங்கே?

14. பயப்படாதே உனக்கு சமாதானம் உண்டாவதாக, திடன்கொள் திடன்கொள் என யாருக்கு சொல்லபட்டது?

15. அவனுக்கு விரோதமாக பாவம் செய்தோம் என்று சொன்னது யார்?

விடைகளை வருகின்ற 20-09-2019 க்குள் சபையின் செயலாளரிடமோ அல்லது செய்திமலர் பொருப்பாளரிடமோ நேரில் கொடுக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.. அல்லது விடைகளை (Whatapps # Seithi malar ATC 66015503 என்ற குரூப்பில் அனுப்பவும்) விடைகளை வேதாகமத்தில் தானியேல் 1,2,3,4,5,6,7,9, 10,11,12, ஆகிய அதிகாரங்களில் இருந்து பதிலைத் தேடுங்கள் )

(குறிப்பு) செயற்குழு உறுப்பினர் அல்லாது மற்றவர்களிடம் விடைத்தாள் கொடுக்கும்பட்சத்தில் ..அந்த விடைத்ததாளுக்கு செய்திமலர் பொறுப்பாளர் பொறுப்பல்ல,

## தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; - -

மத்தேயு 7:7

# வாலிபர் பகுதி

**தேவனை தேடுகிற உணர்வுள்ளவன் உண்டோ என்று பார்க்க, கர்த்தர் பரலோகத்திலிருந்து மனுபுத்திரனைக் கண்ணோக்கினார். சங்கீதம் 14:2**

**ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் யாவருக்கும் என் அன்பின் வாழ்த்துகள்!**

**அன்பான வாலிபனே சகேதரனே, சகோதரியே! என் எதிர் காலம் என்னவாயிருக்கும்? என் நிலமை, வறுமை, துக்கம், சஞ்சலம், தவிப்பு என்ற பல போராட்டங்களோடு வாழ்ந்து, தேவைகள் குறித்து காத்திருக்கிறீர்களா?**

## இயேசு கிறிஸ்து சொல்கிறார். . .

**"கேளுங்கள் அப்பொழுது உங்களுக்கு கொடுக்கப்படும். தேடுங்கள் அப்பொழுது கண்டடைவீர்கள் தட்டுங்கள் அப்பொழுது உங்களுக்கு திறக்கப்படும்" லூக்கா 11:9ல் இவ்விதம் சொல்கிறார்.**

**நாம் அனைவருக்கும் இப்பொழுது ஒன்று மனதில் தோன்றலாம். எல்லாவற்றையும் கேட்டுப்பெற்று கொள்ள சொல்கிறாரே அப்படியென்றால் அவருக்கு என் தேவை என்ன என்று தெரியாதா? என்று உங்களுக்கு ஒரு கேள்வி தோன்றலாம்.**

## மத்தேயு சுவிசேஷம் 6:8ல் சொல்கிறது.

**"உங்கள் பிதாவை நோக்கி நீங்கள் வேண்டிக் கொள்வதற்கு முன்னமே உங்களுக்கு இன்னது தேவை என்று அவர் அறிந்திருக்கிறார்."**

**இந்த வார்த்தையை வைத்து பார்க்கும் பொழுது "அவர் கேளுங்கள் அப்பொழுது உங்களுக்கு கொடுக்கப்படும் " என்று சொல்கிறார்.**

**நீங்கள் வேண்டிக் கொள்வததற்க்கு முன்னமே உங்களுக்கு இன்னது தேவை என அறிந்திருக்கிறார் என்றும் சொல்கிறார்.**

**அப்படியென்றால் எதற்காக கேட்க சொல்கிறார். அதுதான் ஆண்டவருக்கும் நமக்கும் உள்ள உறவு. உன் தேவைகளை எல்லாம் அறிந்த தேவன் அவ்வப்பொழுது உன் தேவைகளை சந்தித்து கொண்டே இருந்தால் உன் முழுங்கால் முடங்கும் என்று 100 சதவீதம் சொல்வது கடினம், உனக்கு எப்பொழுது கொடுக்க வேண்டும் எப்படி கொடுக்க வேண்டும் என்று அவருக்கு தெரியும்.**

**இன்றைக்கு ஆண்டவரோடு உள்ள உங்கள் உறவு எப்படி பட்டதாய் இருக்கிறது. அவருக்காக நீங்கள் செலவழிக்கும் நேரம் எவ்வளவு, அவருக்காக செய்தது என்ன?**

**மேற்கண்ட இரண்டு வசனத்தையும் வைத்து பார்க்கும் பொழுது தேவன் நம்மிடம் எதையோ எதிபார்க்கிறார். அதுதான் என் மகன், மகள் என்னை எவ்வளவாய் நேசிக்கிறாள் என்பதை அவர் பரலோகத்திலிருந்து கண்ணோக்கி கொண்டிருக்கிறது.**

அன்பான சகோதரனே , சகோதரியே உன்னுடைய ஒவ்வொரு அசைவுகளையும் தேவன் கண்ணோக்கி தேவைகளை சந்தித்து உன்னை அவருடைய பாத்திரமாக புடமிட்டு கொண்டிருக்கிறார்.

"கர்த்தரின் கண்கள் எவ்விடத்திலுமிருந்து, நல்லோரையும் தீயோரையும் நோக்கி பார்க்கிறது"–நீதிமொழிகள் 15:3

அவர் உன்னிடம் எதிர்பார்க்கிறவை உன்னுடைய ஜெபத்தை அதிகமாக்க வேண்டும் என்பது. உனக்கு விரோதமாய் பிசாசு போராடுவான். இருந்தாலும் கவனமாய் அவர் "உன்னை உயர்த்தும்படிக்கு அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிரு".

"என் சத்துருவே, எனக்கு விரோதமாய்ச் சந்தோஷப்படாதே, நான் விழுந்தாலும் எழுந்திருப்பேன். நான் இருளிலே உட்கார்ந்தால் காத்தர் எனக்கு வெளிச்சமாயிருப்பார்"–மீகா 7:8. என்ற விசுவாசத்தோடு முன்னேறிச் செல்.

"இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன், ஒருவன் என் சத்தத்தை கேட்டு, திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம் பண்ணுவேன் அவனும் என்னோடே போஜனம் பண்ணுவான்"–வெளிப்படுத்தின விசேஷம் 3:20

முன்பகுதியிலே தியானித்தோம் நாம் தட்ட வேண்டுமென்று, இப்பொழுது அவரே தட்டுகிறாராம். உங்கள் இருதய கதவை அவருடைய சத்தத்தை கேட்கிறவனிடத்தில் பிரவேசித்து போஜனம் பண்ணுவாராம்.

இரண்டு பகுதியையும் வைத்து தியானித்தால் அவருடைய நாமம் தரிக்கப்பட்ட ஜனம் ஒருவனும் கெட்டு போவது அவருடைய சித்தமல்லவென்று அறிந்து உன்னை கண்ணோக்கி கொண்டிருக்கிறார்.

1.நீ என்னிடத்தில் வா இல்லையென்றால்

2. நான் உன்னிடத்தில் வருகிறேன்

என்று நமக்கு உணர்த்துகிறார்.

ஒருவனையும் அவர் விடப்போவதில்லை. வசனம் விதைக்கப்பட்டு விதை முளைத்தாயிற்று இருந்தும் இன்றும் கனி கொடுக்காத தேவ ஜனமே ஜாக்கிரதையாய் இரு.

காலம் கடைசியாயிற்று எஜமான் கோடாரியை வைத்து காத்துக்கொண்டிருக்கிறார்.

"கோடாரியானது மரங்களின் வேர் அருகே வைத்திருக்கிறது, ஆகையால் நல்ல கனிகொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும்"–லூக்கா 3:9.

எனவே எழுந்திடு தேவ ஜனமே,விளக்கை கொளுத்தி மரக்காலில் ஒளித்து வைக்காமல் எழுந்து ஒளிவீசு. கர்த்தர் பெரிய காரியங்களை செய்வாராக ஆமேன்.

வாலிபம் இயேசுக்கே !!!

**திருச்சபை வாலிபர் குழு**

## "கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்"

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர, சகோதரிகளே இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள். இந்த வாய்ப்பை கொடுத்த என் தேவாதி தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன்.

கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள் என்ற தலைப்பின் மூலம் சில காரியங்களை வேதாகமத்தின் அடிப்படையில் நாம் பார்க்க போகிறோம். "கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள். சந்தோஷமாயிருங்கள் என்று மறுபடியும் சொல்லுகிறேன்" (பிலி–4:4)

எப்பொழுதும் சந்தோஷமாயிருப்பது என்பது நாம் அன்றாட வாழ்வில் கூடாத காரியம் ஏனென்றால் நாம் அன்றாட வாழ்வில் பிரச்சனைகளும், பாடுகளும் நாம் சந்திக்க நேரிடும். ஆனால் லூக்–18:27–வது வசனம் கூறுகிறது "மனுஷரால் கூடாதவைகள் தேவனால் கூடும்" ஆம் பிரியமானவர்களே நாம் நம்முடைய கவலைகளையும், பாரங்களையும் கர்த்தருடைய சமூகத்தில் வைத்துவிட்டால் நாம் சந்தோஷமாயிருக்க முடியும்.

வேதம் கூறுகிறது "நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றைங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும், வேண்டுதலினாலும் தேவனுக்கு தெரியப்படுத்துங்கள். அப்பொழுது எல்லாப் புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக காத்துக்கொள்ளும்" (பிலி 4:6,7)

ஆம் தேவ பிள்ளைகளே, எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள் என்றால் எல்லா சூழ்நிலைகளிலும் நாம் சந்தோஷமாயிருக்க வேண்டும்.

"அத்தி மரம் துளிர்விடாமற் போனாலும், திராட்சை செடியில் பழம் உண்டாகமற் போனாலும், ஒலிவ மரத்தின் பலன் அற்று போனாலும், வயல்கள் தானியத்தை விளையாமற் போனாலும், கிடையில் ஆட்டு மந்தைகள் முதலற்று போனாலும் நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன். என் இரட்சிப்பின் தேவனுக்குள் களி கூறுவேன்" (ஆபகூக்–3:17)

அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகிறார் உபத்திரவங்களிலும், பாடுகளிலும் நாம் கிறிஸ்துவை விட்டு பிரியக்கூடாது என்று. "கிறிஸ்துவின் அன்பை விட்டு என்னை பிரிப்பவன் யார், உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாச மோசமோ, பட்டயமோ"? (ரோமர்–8:36,37)

பிரியமானவர்களே, நாம் சற்று சிந்தித்துப் பார்ப்போம், எப்படி நாம் எல்லா சூழ்நிலைகளிலும் சந்தோஷமாயிருப்பது? நாம் எவ்வளவு சந்தோஷமாயிருந்தாலும் சில நேரங்களில் பிரச்சனைகளினிமித்தம் வரும் பாரங்கள் நம்மை ஆட்கொண்டு விடுகிறது. ஆனாலும் நாம் அந்த பிரச்சனைகளில் முழுகி போகதபடி நாம் வேத வசனத்தை அறிக்கையிட்டு தேவ சமூகத்தில் ஜெபத்திலும் வேத வாசிப்பிலும் பெருகும் போது நாம் இழந்த அந்த சந்தோஷத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

"கர்த்தர் மேல் உன் பாரத்தை வைத்துவிடு அவர் உன்னை ஆதரிப்பார். நீதிமானை ஒரு போதும் தள்ளாடவொட்டார்" (சங்கீ–55:22)

## 1.தானியலைப் போல...

வேதத்தில் தானியலைக்குறித்து பார்த்தோம் என்றால் அவர் தினமும் மூன்று வேளை தேவனை தேடுகிறவராக காணப்பட்டார். ஆனாலும் அவருடைய வாழ்க்கையில் சிங்கக்கெபியில் போடுகிறதான மிகப்பெரிய சோதனை வந்தது. அப்படிப்பட்ட சூழ்நிலையிலும் அவர் சோர்ந்து போகவோ, கலங்கவோ இல்லை. சூழ்நிலையை பார்க்காமல் எப்போதும் போல மூன்று வேளை அவர் ஜெபித்து வந்தார். முடிவில் அந்த சோதனையிலிருந்து தேவன் அவரை காத்துக்கொண்டார். ஏனென்றால் அவர் இடைவிடாமல் தேவனை துதிக்கிறவராக காணப்பட்டார்.

நாமும் அது போல எல்லா சூழ்நிலைகளிலும் இடைவிடாமல் தேவனை நோக்கி பார்ப்போம். அப்பொழுது நமக்கு காணப்படுகின்ற எல்லா பிரச்சனைகளிலிருந்தும் தேவன் நம்மை விடுவிப்பார்.

## 2.பவுலும் சீலாவும் போல..

அப்-16:22-40-ல் பவுலும், சீலாவும் கர்த்தருக்காக வைராக்கியமாய் ஊழியம் செய்தார்கள். அவர்களுடைய வாழ்க்கையில் சிறைச்சாலையில் இருக்க வேண்டிய சூழ்நிலை வந்த போதிலும் அவர்கள் இருந்த இடத்தையோ, சூழ்நிலைகளையோ பார்க்கவில்லை பிரியமானவர்களே. அவர்கள் தேவனை துதித்துப் பாடினார்கள். கடைசியில் சிறைச்சாலையில் பெரிய அற்புதம் நடந்தது.

ஆம் பிரியமானவர்களே, நம்முடைய வாழ்விலும் சிறைச்சாலை போன்ற சூழ்நிலைகளிலும் நாம் தேவனை நோக்கி பார்க்கும்போது நிச்சயமாகவே நமக்கு சாத்தியமாகும்.

## 3.இயேசுவைப் போல..

லூக்-22:41-43-ல் நமக்காக பிதாவின் சித்தத்தின்படி மகிமையை விட்டுவிட்டு இந்த பூமிக்கு நம்மைப் போல மனிதனாக வந்தவர்தான் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து. அவருடைய ஊழியப்பாதையிலும் பலவிதமான பிரச்சனைகள், சோதனைகள் இருக்கதான் செய்தது. ஆனாலும் அந்தப் பாடுகள் மத்தியிலும் அவர் பிதாவின் சித்தத்தை செய்வதில் எப்போதும் சந்தோஷமாகவே இருந்தார்.

ஆம் பிரியமானவர்களே, சூழ்நிலைகளை பார்க்காமல் தேவனை நோக்கி ஜெபிக்கும் போது தேவன் நம்மை விடுவிப்பார்.

நாம் எப்படி வாழ வேண்டுமென்கின்ற முன் மாதிரியை அவர் வைத்துப் போனார். மறுபடியும் நமக்காக அவர் வரவும் போகிறார்.

ஆம் பிரியமானவர்களே, நாமும் அவரைப் போல வாழ நம்மை ஒப்புக்கொடுப்போமா?

இந்த செய்தியை என்னுடைய அனுப சாட்சியாகவே நான் எழுதியிருக்கிறேன். இது உங்களுக்கும் பிரயோஜனமாய் இருக்கும் என்று கர்த்தருக்குள் விசுவாசிக்கிறேன்.

கர்த்தருடைய நாமம் மகிமைப்படுவதாக. ஆமென்

இப்படிக்கு
உங்கள் அன்பு சகோதரி
**ஷுபா பிரசாத்**

# கடந்த மாத நிகழ்வுகளில்சில
# உங்கள் பார்வைக்கு

















செயற்குழு உறுப்பினர்கள்

சபை ஊழியர் – சகோ. ஸ்டாலின்

66021072

செயலாளர் – சகோ. ஆரோக்கியதாஸ்

99870126

பொருளாளர்– சகோ. எபநேசர்

23922058 - 50203472

பெண்கள் ஐக்கிய தலைவி

சகோதரி . பியூலா ஜெகநாதன்

60797360

வாலிப ஐக்கிய தலைவர் –

சகோ. ஆரோக்கியராஜ்

66159784


Church Website Address - ahmaditamilcongregation.org

Church ‘E’ mail ID - ahmaditamil.kw@hotmail.com

Church Postel Address

Your name - Po. Box no 46795. 64018, fahaheel ,Kuwait


தங்களுக்கு வாகன வசதி தேவைபடும்

பட்சத்தில் நீங்கள்

சகோதரர் ஜான்ஸன் அவர்களை தொடர்பு கொள்ளும்படி

கேட்டுக் கொள்ள படுகிறோம்

அவரது தொலை பேசி எண்

97610275

Private Circulation only